# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 122 /பேரூ/2026**
**நாள் : 22.09.2026**

க. பழனிவேல், – முறையீட்டு மனுதாரர்
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம்.

செயல் அலுவலர்,
பண்ணைப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம். - எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், உத்தமபாளையம், 157/17, கம்போஸ்ட் டிப்போ தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. க. பழனிவேல் என்பவரின் 30.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.05.2026 அன்று பெறப்பட்டு, 122/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், உத்தமபாளையம், 157/17, கம்போஸ்ட் டிப்போ தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. க. பழனிவேல் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த 30.04.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த M. முருகேசன் என்பவர் 2021ஆம் ஆண்டு இறந்து விட்டார். M. முருகேசன் என்பவரின் வாரிசு ஆகிய முனியம்மாள் பல ஆண்டுகளாக புதிய ஓய்வூதிய பங்குத் தொகை பணபயன்கள் கேட்டு இன்று வரை வழங்கப்படவில்லை. நான் CITU ஊரக உள்ளாட்சித் துறை ஊழியர் சங்கம், தேனி மாவட்ட பொறுப்பில் உள்ளேன். நான் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் சம்பந்தப்பட்ட M. முருகேசனின் வாரிசு, மனைவி முனியம்மாள் என்பவருக்கு வழங்க வேண்டிய

புதிய ஓய்வூதிய பங்குத் தொகை பணப்பயன்கள் கேட்டதற்கு பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் நாங்கள் இயக்குநர் கருவூலகம் மற்றும் கணக்கு இயக்குநரகம் அலுவலகத்திற்கு கருத்துரு ஆவணங்கள் இறுதி ஆணை பெற அனுப்பி வைத்து உள்ளோம் என செயல் அலுவலர் கூறிவிட்டார்.

நான் சம்பந்தப்பட்ட பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலகத்திலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்டு பெற்றுக் கொண்டேன். பிறகு சம்பந்தப்பட்ட இயக்குநர் கருவூலகக் கணக்குத் துறை அலுவலகத்திற்கு எனது மகன் பஷ்பசூர்யா மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்டு பெற்றுக் கொண்டோம். இயக்குநர் கருவூலகம் அலுவலகத்திலிருந்து லேட். M. முருகேசன் தூய்மைப் பணியாளர் வாரிசு முனியம்மாள் என்பவரின் CPS இறுதி தொகை பெறுவதற்கான கருத்துரு இதுநாள் வரை இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை என தகவல் தெரிவித்துள்ளனர்.

இயக்குநர் கருவூலக் கணக்குத் துறை அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெறப்பட்ட தகவல் நகல் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கொடுத்து விபரம் கேட்டால் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் லேட். M. முருகேசன் தூய்மைப் பணியாளர் வாரிசு முனியம்மாள் என்பவருக்கு புதிய ஓய்வூதிய பங்குத் தொகை பெற இயக்குநர் கருவூல கணக்குத் துறை அலுவலகத்திற்கு கருத்துரு ஆவணங்கள் இறுதி ஆணை பெற அனுப்பி வைத்து விட்டோம் எனவும், பணப்பயன்கள் வரவில்லை என்றால் எனக்குத் தெரியாது என்றும் கூறி வருகிறார்.

பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் கையூட்டு பெற்ற பிறகு தான் அதற்கான வேலை செய்கிறார். கையூட்டு தரவில்லை என்றால் பல ஆண்டுகள் காலதாமதம் செய்து வருகிறார்.

கனம் ஐயா அவர்கள், லேட். M. முருகேசன் தூய்மைப் பணியாளர் வாரிசு முனியம்மாள் என்பவர் CPS இறுதி தொகை பெறுவதற்கும் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.05.2026 நாளிட்ட அறிவிப்பின் மூலம் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 13.08.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 30.07.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் எதிர்மனுதாரரான பண்ணைப்பரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.08.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 26/2024ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

“தேனி மண்டலம், தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த M. முருகேசன் என்பவர் 05.01.2021ஆம் ஆண்டு பணியிடையே காலமானார். அன்னார் இப்பேரூராட்சியில் பணிபுரிந்த காலங்களில் புதிய ஓய்வூதிய பங்குத் தொகை 06/2010 முதல் 03/2015 முடிய காலங்களில் ஊதியத்தில் பிடித்தம் செய்து பணியாளர் பங்குத் தொகை மற்றும் பேரூராட்சி பங்குத் தொகையினை அன்னாரது புதிய ஓய்வூதிய கணக்கு எண்.929998/DTP போடிநாயக்கனூர் சார்நிலைக் கருவூலகத்தில் ஒவ்வொரு மாதமும் விடுதலின்றி செலுத்தப்பட்டுள்ளது.

இதனிடையில் பணியாளர் திரு. எம். முருகேசன் பழைய ஓய்வூதிய திட்டத்தில் ஈர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும் புதிய ஓய்வூதிய பங்குத்தொகை பணபயன்கள் பெற கருத்துரு நாளது தேதி வரை இயக்குநர் கருவூலக் கணக்குத் துறை அலுவலகத்திற்கு அனுப்பவில்லை என்று, க. பழனிவேல் என்பவர் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடம் அளிக்கப்பட்ட புகார் எண். 122/பேரூ/2026-4 நாள் 15.05.2026ன்படி புகார் மனு வரப்பெற்றது. மேற்படி தூய்மை பணியாளர் M. முருகேசன் என்பவருக்கு புதிய ஓய்வூதிய பங்குத் தொகை பணப்பயன்கள் பெற கருத்துரு தயார் செய்திட கருவூலக இணையதளத்தில் பணியாளரின் Account Statement பலமுறை முயற்சி செய்தும் தற்போது வரை பதிவிறக்கம் செய்ய இயலவில்லை. பதிவிறக்கம் செய்ய கருவூலக அதிகாரிகளை தொடர்பு கொண்டு அன்னாருக்கு புதிய ஓய்வூதிய பங்குத்தொகை பணபயன்கள் பெறுவதற்கு கருத்துரு தயார் செய்து இயக்குநர் கருவூலக் கணக்குத் துறைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது” என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் திரு. க. பழனிவேல் என்பவர் 13.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- க. பழனிவேல் என்கின்ற நான் தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி துறை ஊழியர்கள் சங்கத்தின் பொருளாளர் பொறுப்பில் உள்ளேன்.

- தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த M. முருகேசன் என்பவர் பணியிடையில் 2021ஆம் ஆண்டில் காலமாகி விட்டார்.

- இதனை தொடர்ந்து காலஞ்சென்ற M. முருகேசன் என்பவரின் வாரிசுதாரரான அவரது மனைவி திருமதி. முனியம்மாள் என்பவருக்கு பங்களிப்பு ஓய்வூதிய தொகை பணப் பயன்கள் வழங்குமாறு பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் பல ஆண்டுகளாக கோரப்பட்டது.

- ஆனால் திருமதி. முனியம்மாள் என்பவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய பணப் பயன்கள் குறித்தான கருத்துரு சென்னை, கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்தார்.

- இதனை தொடர்ந்து, சென்னை, கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டதில், பேரூராட்சி செயல்

அலுவலர் தெரிவித்துள்ளது போல் எவ்வித கருத்துருவும் பண்ணைப்புரம் பேரூராட்சியிலிருந்து பெறப்படவில்லை என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேற்காணும் விவரத்தை பேரூராட்சி செயல் அலுவலரிடம் மீண்டும் தெரிவிக்கப்பட்டதில், பேரூராட்சி அலுவலகம் மூலம் கருவூல கணக்கு துறை இயக்குநரகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டது எனவும், ஓய்வூதிய பணப்பயன்கள் வரவில்லையெனில் தனக்கு தெரியாது என தெரிவித்து வருகிறார்.

- எனவே கடந்த 5 ஆண்டு காலமாக காலந்தாழ்த்தியுள்ள காலஞ்சென்ற M. முருகேசன் வாரிசுதாரரான திருமதி. முனியம்மாள் என்பவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகையை உடனடியாக பெற்றிடவும் மற்றும் அலட்சியப்போக்குடன் நடந்துகொண்ட பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 11.08.2026 நாளிட்ட கடிதத்தில் தான் பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆணைக்கிணங்க, 13.08.2026 மற்றும் 14.08.2026 ஆகிய நாட்களில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், தன்னால் 13.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாது எனவும் தனது சார்பாக பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. மு. ராதா என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு கோரியுள்ளார். எதிர்மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. மு. ராதா என்பவர் 13.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த M. முருகேசன் என்பவர் பணியிடையில் 05.01.2021 அன்று காலமானார்.

- பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக 06/2010 முதல் 03/2015 முடிய காலங்களில் பணிபுரிந்த M. முருகேசன் என்பவரது ஊதியத்திலிருந்து புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அவரது பங்குத் தொகை மற்றும் பேரூராட்சியின் பங்குத் தொகை எவ்வித விடுதலின்றி போடிநாயக்கனூர் சார்நிலை கருவூலகத்தில் செலுத்தப்பட்டது.

- இதற்கிடையில் பணியாளர் திரு. முருகேசன் பழைய ஓய்வூதிய திட்டத்தில் அரசாணை எண். 60, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.06.2006ன்படி ஈர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

- புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் M. முருகேசன் என்பவரின் ஓய்வூதிய பங்கு தொகை வழங்குவதற்கு கருத்துரு தயார் செய்திட கருவூலக இணைய தளத்தில் பணியாளரின் Account Statement பலமுறை முயற்சி செய்தும் இந்நாள்வரை பதிவிறக்கம் செய்ய இயலவில்லை.

- இருப்பினும் காலஞ்சென்ற M. முருகேசன் என்பவருக்கு சேர வேண்டிய புதிய ஒய்வூதிய பங்குத் தொகை வழங்கிட கருவூல கணக்கு இயக்குநரக அலுவலகத்திற்கு 12.08.2026 அன்று நேரிடையாக கலந்து ஆலோசனை செய்யப்பட்டதில், மேற்காணும் திரு. M. முருகேசன் என்பவரின் Account Statement-ஐ திறக்கப்பட்டுவிட்டது. எனவே மேற்காணும் பணியாளருக்கு புதிய ஓய்வூதியம் பங்குத் தொகை பெறுவதற்கு உரிய ஆவணங்களுடன் கருத்துரு தயார் செய்யப்பட்டு கருவூல கணக்கு இயக்குநருக்கு 31.08.2026 தேதிக்குள் அனுப்பி வைக்கப்பட்டு, அடுத்த 1 மாத காலத்திற்குள் M. முருகேசன் என்பவரின் வாரிசுதாரருக்கு சேர வேண்டிய புதிய ஓய்வூதிய பங்குத்தொகை வழங்கப்படும் என பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. க. பழனிவேல் என்பவர் தனது 30.04.2026 நாளிட்ட புகார் மனுவில், தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் துய்மை பணியாளராக பணிபுரிந்த M. முருகேசன் என்பவர் பணியிடையில் 2021ஆம் ஆண்டில் காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகையை அவரது வாரிசுதாரரான அவரது மனைவி முனியம்மாள் என்பவருக்கு பணப்பலன்கள் வழங்காமல் 5 வருடங்களாக பேரூராட்சி செயல் அலுவலர் காலதாமதம் செய்வதாக புகாராக தெரிவித்துள்ளதை அறிய வருகிறது.

மேற்காணும் புகார் குறித்து, பேரூராட்சி இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் பண்ணைப்புரம் பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த M. முருகேசன் என்பவர் 05.01.2021 அன்று பணியிடையில் காலமானார் எனவும், அவரது ஊதியத்திலிருந்து 06/2010 முதல் 03/2015 வரையில் புதிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்டது எனவும், பின்னர் அரசாணை எண். 60 ஊரக வளர்ச்சி துறை, நாள் 23.06.2006ன்படி பழைய ஓய்வூதிய திட்டத்தில் ஈர்த்துக்கொள்ளப்பட்டார் எனவும்,

05.01.2021 அன்று M. முருகேசன் காலமானதை தொடர்ந்து அவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை வழங்குவதற்கு கருவூலக இணைய தளத்தில் அவரின் Account Statement பதிவிறக்கம் செய்ய முடியாததால் உரிய கருத்துரு அனுப்பிட காலதாமதம் ஏற்பட்டது எனவும், இருப்பினும் இந்நேர்வில் தீர்வுகாணும் வகையில் சென்னை, கருவூல கணக்கு இயக்குநரக அலுவலகத்தில் 12.08.2026 அன்று நேரிடையாக கலந்து ஆலோசனை செய்து, M. முருகேசன் என்பவரின் Account Statement திறக்கப்பட்டது எனவும், அன்னாருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகையை வழங்கிட உரிய கருத்துரு கருவூல கணக்கு இயக்குநருக்கு 31.08.2026 தேதிக்குள் அனுப்பி வைத்து, அடுத்த 1 மாத காலத்திற்குள் M. முருகேசன் என்பவரின் வாரிசுதாரருக்கு சேர வேண்டிய ஓய்வூதிய பங்குத் தொகை வழங்கப்படும் எனவும் தெரிவித்திருப்பதை பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நேர்வில் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான பண்ணைப்புரம் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு

காலஞ்சென்ற M. முருகேசன் என்பவருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை வழங்குவதற்கான உரிய கருத்துருவினை 30.09.2026ஆம் தேதிக்குள் கருவூல கணக்கு இயக்குநரகத்திற்கு அனுப்பி வைத்து M. முருகேசன் என்பவரின் வாரிசுதாரருக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகையை வழங்கிட பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. க. பழனிவேல்,
   157/17, கம்போஸ்ட் டிப்போ தெரு ,
   உத்தமபாளையம், தேனி மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   பண்ணைப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/9/26
செயலாளர்.
25/9/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032